ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 3.

பிங்கள ௵ ஆஷாட சுத்தபஞ்சமி.

பாகவதமென்றால் எது?

புராணங்களிலொன்றாய்க் கணக்கிடப்பட்ட பாகவதமென்பது தேவீ பாகவதமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். விஷ்ணு பாகவதமோ போபதேவரென்பவரால் செய்யப்பட்டது என்று அவர்களின் எண்ணம். இவ்வபிப்பிராயம் பிசகானது. பவிஷ்யத் புராணத்தில் போபதேவரென்பவர் பகவானுடைய அனுக்கிரகத்தினால் வியாசரால் செய்யப்பட்ட விஷ்ணு பாகவதக் கதையைத் தெரிந்து, கொண்டாரென்று சொல்லியிருக்கேயொழிய அவர் பாகவதத்தைச் செய்ததாகச் சொல்லவில்லை. தவிரவும் ஷை விஷ்ணு

பாகவதத்திற்கே ஸ்ரீதரரென்னும் பிராமணர் வியாக்கியானம் செய்ததாகவும் ஷை பவிஷ்யத் புராணத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் தேவீபாகவதம் புராணமல்ல, விஷ்ணுபாகவதம்தான் புராணமென்று தீர்மானமாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் சிலர் அபிப்பிராயப்படுவதாவது—இவ்விதம் தீர்மானித்தால் தேவீபாகவதத்திற்கு என்ன கெதி. அதுவும் வியாசரால் செய்யப்பட்டதாக உலகத்தில் பிரசித்திபெற்றிருக்கிறது. அதை அவ்விதமில்லை என்பது உசிதமோ? ஆனால் இரண்டு பாகவதங்களையும் புராணங்களில் சேர்த்தால் கணக்குக்கு அதிகப்படுகிறது. ஒன்றைப் புராணமாயும் மற்றொன்றை பாரதாதிகளைப்போல் வியாசர் செய்ததாயும் சொல்வோமென்றால் எதைப் புராணத்திற் சேர்க்கலாம்? தேவீ பாகவதம்தான் ஏன் புராணமாயிருக்கக் கூடாது? பவிஷ்யத் புராணத்தில் விஷ்ணு பாகவதம் வியாசர் செய்தாரென்று மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர அது புராணங்களிலொன்று என்று சொல்லப்படவில்லையே. தவிரவும் பதினெட்டுப் புராணங்களையும் செய்து பிறகு பாரதத்தை வியாசர் செய்ததாக மத்ஸ்ய புராணம் 53-வது அத்தியாயம் முதலிய பலவிடங்களில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஷை பாரதம் செய்த பிறகு வியாசர் இந்த விஷ்ணுபாகவதம் செய்ததாய் ஷை பாகவதம் முதல் ஸ்கந்தம் 4-வது அத்தியாயத்தில் வெளியாகிறது. பவிஷ்யத் புராணத்திலும் பாகவதத்திற்கு ஸ்ரீதரர் வியாக்கியானம் செய்ததாகச் சொல்லி ஷை பாகவதமானது புராணங்களுக்குமேல் அதாவது புராணங்கள் செய்ததற்குப் பிறகு செய்யப்பட்டதென்று ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. புராணங்களுக்குப் பிறகுசெய்த

अष्टादश पुराणानि कृत्वा सत्यवतीसुतः ।

भारताख्यानमखिलं चक्रे तदुपबृंहितम् ॥

என்று பாரதமே புராணங்களுக்கு வேறாயிருக்கும்பொழுது அதற்குப் பிறகு செய்ததாய்ச் சொல்லப்பட்ட விஷ்ணுபாகவதம் எங்ஙனம் புராணமென்று சொல்லத் தகும்? இதை யோஜித்தால் விஷ்ணுபாகவதம் வியாஸரால் செய்யப்பட்டதானாலும் புராணமென்று சொல்லவில்லை. தேவிபாகவதத்தைப் புராணமென்று சொல்வோமானாலும் சில ஆக்ஷேபமிருக்கிறது. அதாவது—புராணமாகச் சொல்லப்பட்ட பாகவதம் வைஷ்ணவ புராணங்களிலொன்றாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. தேவிபாகவதம் தேவியைச் சொல்கிறதாயிருப்பதால் விஷ்ணுவைச் சொல்கிறதாயிருக்கிற வைஷ்ணவ புராணமாக எவ்விதம் சொல்லத் தகும் என்ற ஆக்ஷேபமுண்டாகிறது. ஆனால் சிலர் ருக் வேதம் ஆப்ராணீஸூக்தத்திலும் மற்றும் சில சுருதிகளிலும்

देव्या कृष्णं प्रति वचनम्—
वत्स जाने तथानन्तां निश्चलां सर्वदाच्युत ।
अनन्यामीश्वरे भक्तिमात्मन्यपि च केशव ॥
त्वं हि नारायणः साक्षात्सर्वात्मा पुरुषोत्तमः ।
प्रार्थितो दैवतैः पूर्वं संजातो देवकीसुतः ॥
पश्य त्वमात्मनात्मानममलं परमं पदम् ।
नावयोर्विद्यते भेद ऐक्यं पश्यन्ति सूरयः ॥

என்கிற கூர்ம புராணத்திலும் மற்றுமுள்ள புராணங்களிலும் விஷ்ணுவும் தேவியும் ஒரே தத்துவமாகச் சொல்லியிருப்பதால் தேவியைச் சொல்லும் புராணங்கூட விஷ்ணுவைச் சொல்லுகிற வைஷ்ணவ புராணமாகலாமென்று சமாதானம் சொல்லுகிறார்கள். ஆகையால் இது புராணம் இது புராணமல்லவென்று தீர்மானம் செய்வது மிகக்கடினம். எது எவ்விதமிருந்தாலும் இரண்டு பாகவ

தங்களும் ஆர்யர்களால் பிரமாணமாகவங்கீகரிக்கத் தக்க வைகளே—இவ்விரண்டுகளில் எந்த பாகவதத்தைப் பற்றி யும் போபதேவரோ அல்லது யாரோ செய்தவரென்கிற ஆசங்கை ஒருக்காலும் கூடாது. இரண்டும் பிரமாண மென்பதுதான் சரியான சித்தாந்தமென்று சொல்லுகிறார் கள். ஆகையால் போபதேவர் யாதொரு பாகவதத்தை யும் செய்தவரல்ல. இதனால் ஆதுனிகர்களில் யாரோ செய்தாரென்று எந்தபாகவதத்தையும் அப்பிரமாணமாகக் கூறுவது ஒருக்காலும் உசிதமல்லவென்று வெளியாகிறது. ஆகையால் விஷ்ணுபாகவதம் தேவீபாகவதம் இவ் விரண்டும் பிரமாணமென்று தெரிந்து கொள்ளவேண் டும்.

வியாஸாசலீயம்

पुरोपमन्युः किल पञ्चहायनः संतोषयामास शिवं समाधिना
आराधिता दैवतकल्पवल्लरी फलान्यभीष्टानि फलिष्यति ध्रुवम् ॥ १ ॥

முன் ஒரு சமயத்தில் ஐந்து வயதையுடைய உபமந்யு என்று பெயர்கொண்ட ஒருவர் தவத்தால் ஸ்ரீ பரமேசு வரனை சந்தோஷிக்கச் செய்தார். தெய்வமென்கிற கல்ப கலதையானது நன்கு ஆராதிக்கப்பட்டால் விரும்பியபலன் களை யளிக்கும்; நிச்சயம் தான்.

किलोपमन्योर्जननी दरिद्रा पिष्टं समालोड्य जले ददाति ।
स्तन्यं च किंचित्परिकर्शिताङ्गी स दुग्धबुद्ध्याददतेऽपि भुङ्क्ते ॥ २ ॥

கார்சியத்தையடைந்த சரீரத்தையுடையவளாயும் தரித்தி

ரையாயுமிருக்கும் இந்த உபமன்வினுடைய தாயானவள் தன் புத்திரனுக்கு மாவை ஜலத்தில் கரைத்துப் பாலென்று கொடுத்தாள். அவரும் அதைப் பாலென்றே நினைத்து வாங்கி சாப்பிட்டார்.

स चोपजीवन्निति मातुलस्य गेहं जनन्या प्रययौ कदाचित् ।
गोमान्धनी सर्वगुणाधिवासः स मातुलस्तस्य गृहे न्यवात्सीत् ॥ ३ ॥

இவ்விதம் பாலென்று கொடுக்கப்பட்ட மாஜலத்தை சாப்பிட்டு ஜீவித்துக் கொண்டிருந்த உபமன்யுவானவர் மாதாவுடன்கூட தன்மாதுலர் கிருகத்துக்குச்சென்று நற்குணங்களுக்கிருப்பிடமாயும் சிறந்த பசுக்களையுடையவராயும் மிகுந்த ஐசுவரியத்தையடைந்தவராயுமிருக்கிற மாதுலருடைய கிருகத்தில் கொஞ்சகாலம் வசித்தார்.

सदुग्धमन्नं सघृतं समश्नाश्चिक्रीड बालैः सह वीतरोगः ।
पुनश्च मात्रा सहितः समागात्स्वकीयदारिद्र्यगृहाणि बालः ॥ ४ ॥

அந்த உபமன்யுவானவர் தன் மாமன் வீட்டிலிருக்கும்வரையில் பூர்ணமான பாலுடனும் நெய்யுடனும் ஆகாராதிகளை இஷ்டப்படி புசித்து ஒருவிதமான ரோகமின்றி சந்தோஷமாய் மற்றுமுள்ள பாலர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். கொஞ்ச காலஞ் சென்றபிறகு மறுபடியும் தன் தாயாருடன்கூட இந்தக் குழந்தையானது தாரித்திரியத்திற்கு இருப்பிடமான தன் கிருகத்தையடைந்தது.

भूयोऽपि माता कृपणा पुरेव सा सनीरपिष्टं प्रददावरोचत ।
नास्मै तदन्नं विजहावथारुदद्दुग्धं न मातः पय इत्यवोचत ॥ ५ ॥

இந்தக் குழந்தையினுடைய தாயாரானவள் தன்னுடைய தாரித்திரியத்தால் மறுபடியும் முன்போல் மாஜலத்தையே பாலென்று அக்குழந்தைக்குக் கொடுத்தாள். அது அக்குழந்தைக்குப் பிடிக்காமல், இது பாலல்ல ஜலமென்றும், பாலன்னம் வேண்டுமென்றும் அழுதது.

शनै रुदन्ती तनयं बभाषे मातोदिताश्रूणि विमृज्य दीना ।
तातेदृशं दुग्धमिहास्ति गेहे विशेषलाभे मम नास्ति भाग्यम् ॥ ६ ॥

இவ்விதமழுகின்ற புத்திரனைப் பார்த்துத் தானும் அதிக துக்கத்தால் வியசனத்தையடைந்த தாயாரும் குழந்தையினுடைய கண்ணீர் ஜலத்தைத் துடைத்து, அப்பா என்று குழந்தையைக் கூவி இந்த மாதிரிப் பால்தான் இவ்விடத்திலிருக்கிறது. நீ கேட்கிற பாலைக் கொடுக்கக் கூடிய பாக்கியம் எனக்கில்லை என்று சொன்னாள்.

आराधितो नो वरकल्पशाखी भवान्तरे तात मया कदाचित् ।
यदीश्वरस्याङ्घ्रिसरोजमर्पितं तदा कथं जीवनमीदृशं स्यात् ॥ ७ ॥

அப்பா விரும்பிய பொருளை யளிப்பதில் கற்பகம்போல் விளங்கும் ஈசன் ஜன்மாந்திரத்தில் அற்பங்கூட ஆராதிக்கப்படவில்லை. ஏனென்றால், ஒரு சமயமாவது ஈசுவரனுடைய திருவடிகளை நான் ஆராதித்திருந்தால் இப்பொழுது இவ்விதம் கஷ்டமான ஜீவனம் எப்படி ஏற்படும்?

तातेह ये परिजनाम्बरभूषणाढ्याः
श्रीरत्नगोवसुमतीसुखभोगभाजः ।
तान्विद्धि पूजितशिवान्पुरुषांस्त्रिलोक्यां
नो चेत्कथं गदितवैभवभागिनः स्युः ॥ ८ ॥

மறுபடியும் புத்திரனை நோக்கிக் கூறுகிறாள்—

அப்பா குழந்தாய், இவ்வுலகில் எவர்கள் அதிக பூமி, தனம், பசுக்கள், ஆபரணங்கள், வஸ்திரங்கள், பரிவாரங்கள், உத்தம குணமுடைய ஸ்திரீரத்னங்கள் முதலிய ஸாதனங்களால் நிறைந்தவர்களாய்க்கொண்டு உத்தமமான போக சுகத்தை யடைகிறார்களோ அவர்கள் எங்கிருந்தாலும் விசேஷமான சிவாராதனம் செய்தவர்களாக அறி. அப்படி இல்லாவிட்டால் இவ்விதம் சிலாகிக்கத் தகுந்த வைபவத்தை உடையவர்களாக எப்படி ஆவார்கள்?

यद्येवमेव मम दुर्विधतापहन्तृ
कर्माकलय्य विधिवत्करणीयमेव ।
तुष्टेश्वरं करुणयैव विना विपत्तिं
यानश्नुते न विरहय्य तनुं न मेऽन्यत् ॥ ॥ ९ ॥

இவ்விதம் கூறும் தன் அன்னையிடம் உபமன்யு தெரிவிக்கிறார்—இந்த பிரகாரமிருக்குமாகில் எந்த ஈசுவரனை ஆராதித்து அவருடைய கருணையால் எவ்வித விபத்துமன்றி சகல போகங்களையும் சரீரத்துடன்கூட அனுபவிக்கிறார்களோ அவ்விதமான என் தாபத்தைப் போக்கடிக்கக்கூடிய சிவாராதன கர்மாவை சாஸ்திரப் பிரகாரம். செய்யவேண்டும். வேறொன்றிலும் விருப்பமில்லையென்றார்.

इतीरयित्वा जननीमनुज्ञां पञ्चाब्दमात्रस्तपसे धृतात्मा ।
अयाचताद्याहमटानि किंचित्संप्रार्थयस्वाखिलदेवतास्त्वम् ॥ १० ॥

ஐந்தாவது வயதிலிருக்கும் அந்த உபமன்யுவானவர் இவ்விதம் தன் அபிப்பிராயத்தை மாதாவுக்கறிவித்து, ஈசுவரனை யுத்தேசித்துத் தவம் புரியவேண்டுமென்கிற நிச்சயமுடையவராய்க் கொண்டு நான் இப்பொழுது தவம் செய்யப்போகிறேன், அதற்கு நீ எனக்கு அனுமதி கொடு. சமஸ்தமான தேவதைகளையும் பிரார்த்தித்துக்கொள் என்று மாதாவிடம் அறிவித்தார்.

பிராமணப் பெண்களின் விவாஹத்தைப்பற்றி யுக்திவாதிக்கும், பண்டிதருக்கும் ஸம்பாஷணை.

யுக்திவாதி :—விவாஹமென்பது புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் அவரவர்களுக்கு இஷ்டமிருந்தால் செய்துகொள்ளத்தக்க கர்மமாகும.

பண்டிதர் :—ஆ! அப்படியல்ல; புருஷர்களுக்கு மட்டில் அது காம்யம்; ஸதிரீகளுக்கு விவாஹம் நிததியமான தால் அவசியம செயயவேண்டிய கர்மமாகும்.

யு.— இதென்ன! ஸ்திரீகளுக்குமட்டில் விவாஹம் நித்தியமென்பதற்குக் காரணமென்ன?

ப.—ஸ்திரீகளுக்கு விவாஹமானது உபநயனத்திறகு பதிலான ஸமஸ்காரமெனறு சாஸ்திரஙகளில் விதிக்கப்படுகிறது. ஆகையால புருஷர்களுக்கு உபநயனம் நித்தியமாயிருப்பதுபோல் ஸ்திரீகளுககு விவாஹம் நித்தியமாகிறது. புருஷர்களுக்கு உபநயனஞ் செய்யாமலிருந்தால் ஸதிரீகளுக்கும விவாஹம செய்யாமலிருககலாம.

யு.—எந்த சாஸ்திரத்தில் ஸ்திரீகளுக்கு விவாஹமானது உபநயனத்துக்கு பதிலான ஸம்ஸ்காரமெனறு விதிக்கப்படுகிறது?

ப.—கேளும்; மனுஸ்மிருதி 2-வது அத்தியாயததில் ஸ்திரீகளுக்கு சௌளம வரையிலுள்ள ஸம்ஸகாரங்களை அமந்திரகமாய் அந்தந்த காலததற் செய்தபின உபநயன காலததில் அதற்கு பதிலாய் விவாஹமானது மந்திரவததான ஸமஸகாரமாக விதிக்கபபடுகிற

தென்றும், ஸ்திரீகளுக்கு பதிஸேவையே குருகுல வாஸம், வீட்டு வேலை செய்வதே அவர்களுக்கு ஸமிதாதானம் என்றும் மனு உபதேசிக்கிறார்.

अमन्त्रिका तु कार्येयं स्त्रीणामावृदशेषतः ।
संस्कारार्थं शरीरस्य यथाकालं यथाविधि ॥
वैवाहिको विधिः स्त्रीणां संस्कारो वैदिकः स्मृतः ।
पतिसेवा गुरौ वासो गृहार्थोऽग्निपरिक्रिया ॥

இவ்விதம் மனு கூறியிருப்பதாக மற்ற ரிஷிகளும் கூறுகிறார்கள்.

स्त्रीणामुपनयस्थाने विवाहं मनुरब्रवीत् ।

யு.—அது இருக்கட்டும்; முன்னோர்களான ரிஷிகளின் பெண்கள் விவாஹமில்லாமலே கிழத்தனம் வரையில் தவஞ்செய்தார்களென்று பாரதம் முதலான கிரந்தங்களில் கதையிருக்கிறதே. அவர்களுக்குமட்டில் விவாகம் நித்தியமன்றோ. முன் காலத்து ஆசாரம் ஸ்திரீகளுக்கு விவாஹம் காம்யமென்பதுதான். குணி என்ற முனியின் குமாரியான ஸுப்புருவானவள் விவாஹமில்லாமலே தவஞ்செய்தாளென்று சல்யபர்வத்தில் சொல்லப்படுகிறதே.

ப.—விவாஹத்தைப்பற்றிய விதிகள் பலவிருந்தும் அதை விட்டு ஏதோ ஒரு மூலையில் எழுதின கதையைத் தேடிப் பிடித்தீரே! இருக்கட்டும், சில ஜனங்களின் நடத்தையைக்கொண்டு பொதுவான தேசாசாரத்தை ஸ்தாபிக்க முடியுமா? விதிக்கு விரோதமான நடத்தை பிரமாணமாகுமோ? சட்டத்திற்கு விரோதமாய் தக்க மனிதன் நடந்தாலும் நாமும் அவனைப்போல் நடக்க முயன்றால் என்னகெதி நேருமென்று கவனிக்கவேண்டும்.

யு.—இவ்விதம் மெரட்டுவதற்காக நாங்கள் அஞ்சோம். ரிஷி குமாரியான ஸுப்ரு விவாஹமில்லாமலிருந்தாளே அவளுக்கு என்ன குறை. அதுபோல் நம் பெண்கள் ஏன் இருக்கக் கூடாது?

ப.—ஐயோ! அவள் பட்டபாடு தெரியாதா? ஸுப்ருவின் கதை ஒன்றே ஸ்திரீகளுக்கு விவாஹம் அவசியமென்பதற்கு முதல் சாக்ஷி. ஸுப்ருவானவள் சாதாரணப் பெண்கள்போல் கர்ப்பவாஸத்திலிருந்து பிறந்தவளல்ல. அவள் தந்தை குணியானவர் அரிய தவப் பெருமையால் அவளைப் படைத்தார்.

ऋषिरासीन्महावीर्यः कुणिर्गार्ग्यो महायशाः ।
स तप्त्वा विपुलं राजंस्तपो वै तपतां वरः ।
तपसाथ सुतां सुभ्रूं समुत्पादितवान्विभुः ॥

அவளும் மிகத் தவஞ் செய்தவள். ஆகிலும் விவாஹ ஸம்ஸ்காரமொன்றை அவள் பெறாத பெருங் குற்றத்திற்காக நாரத முனி கடைசியில் உனக்குப் பரலோகம் ஏதென்று அவளை அதட்டி யுபதேசித்தார்.

तपः परमकं प्राप्तं न तु लोकास्त्वया जिताः ।
असंस्कृतायाः कन्यायाः कुतो लोकस्तवानघे ।

அருந்தவத்தாலும் அக்குற்றத்தை விலக்கமுடியாதவளாய் தன் தவத்தில் பாதியை ஓர் முனிவருக்களித்து விவாஹ ஸம்ஸ்காரம் பெற்றே ஸுப்ரு நற்கதியடைந்தாள். ஆகையால் விவாஹஞ் செய்யாத குற்றம் பெண்களுக்கு பெருங் குற்றமென்று வெளியாகிறது.

யு.—அப்படி விவாஹம் அவசியமானாலும் இஷ்டமான சமயத்தில் செய்துகொள்ளுகிறோம்.

ப.—அப்படிச் செய்வது நியாயமல்ல. உபநயன ஸ்தானமான விவாஹம் அதற்கு முக்கியமான 8-வது வய

தில் செய்யவேண்டும். அல்லது ருதுகாலத்துக்கு முந்தி அவசியஞ் செய்துவிடவேண்டும்.

विवाहं चोपनयनं स्त्रीणामाह पितामहः ।
तस्माद्गर्भाष्टमः श्रेष्ठो जन्मतो वाष्टवत्सरः ।
तस्माद्विवाहयेत्कन्यां यावन्नर्तुमती भवेत् ।

யு.—கிழவியான ஸுப்ரூவுக்கு கல்யாணம் எந்த வயதில் நடந்தது.

ப.—கிழவியான ஸுப்ரூ கல்யாண சமயத்தில் தபோ மகிமையால் இளமைப் பருவத்தில்தானிருந்தாள்.

யு—அது எப்படித்தெரியும்?

ப.—இரவில் பர்த்தாவுடன் சேரும்பொழுது அவள் யுவதியாயிருந்தாளென்று சொல்லியிருப்பதைக் கொண்டே தபோ மகிமையால் விவாஹ சமயத்திலும் அதற்குத் தக்கபடி அவள் இருந்தாளென்று தெரிந்துக் கொள்ளலாம்.

सा रात्रावभवद्राजंस्तरुणी वरवर्णिनी ।

யு.—16 வயது வரையில் உபநயனஞ் செய்யலாமென்று சாஸ்திரமிருக்கிறதே. அதுபோல் ஸ்திரீகளுக்கும் விவாஹத்தை செய்யத் தடை என்ன?

ப.—கூடாது. அது புருஷர்களுக்கு மட்டில் கௌண காலம். ஸ்திரீகளின் விவாஹத்திற்கு கௌணகாலங் கூட ருதுவிற்கு முந்திதான்.

யு.—ருதுவான பிறகு விவாஹஞ் செய்தால் என்ன குற்றம்?

ப.—விவாஹத்திற்கு முன் ருதுவான பெண் பிராமணியல்ல. அவள் விருஷளீ. அதாவது சூத்திரை. மதத்தால் அவளை விவாஹஞ்செய்யும் பிராமணனும்

பிராமணனல்ல. அவன் சூத்திரையின் பதி. அவனுடன் ஸல்லாபமும் பங்திபோஜனமுஞ் செய்யக்கூடாது. அப்பெண் தாய்தந்தைகளும் நரகத்தையடைவார்கள்.

யு.—கஷ்டம்! இது யார் சொன்னார்கள்?

ப.—ரிஷிகள் அனைவர்களும் இவ்விதம் முறையிடுகிறார்கள்.

पितुर्गेहे तु या कन्या रजः पश्यत्यसंस्कृता ।
भ्रूणहत्या पितुस्तस्याः सा कन्या वृषली स्मृता ॥
यस्तां विवाहयेत्कन्यां ब्राह्मणो मदमोहितः ।
असंभाष्यो ह्यपाङ्क्तेयः स विप्रो वृषलीपतिः ॥

யு.—இவ்விதம் ஸ்மிருதிகாரர்கள் தானே சொல்லுகிறார்கள். விவாஹத்திற்கு முன் ருதுவானவள் விருஷளீ என்று வேதத்தில் சொல்லவில்லையே.

ப.—ஓகோ! ஸ்மிருதிகள் தங்களுக்கு பிரமாணமல்லவோ! வேதத்தில் சொல்லியதைத்தானே ரிஷிகள் ஸ்மிருதிகளில் உபதேசிக்கிறார்கள்.

யு.—பின்காலத்திலுண்டான மனுஷ்யாளான ரிஷிகளின் வசனத்தை நான் நம்பவில்லை. வேதம் ஒன்றிலிருந்து வெளியாவதை மட்டும் செய்யவேண்டும். விவாஹத்திற்குரிய வேத மந்திரங்களின் அர்த்தத்தைக் கவனித்தால் ருதுவான பெண்ணின் விவாஹமே நியாயமாகத் தோன்றுகிறது. அதைக்கொண்டு அவ்விதம் வேறொரு விதியை ஏற்படுத்துகிறோம்.

ப.—வெகு நன்றாயிருக்கிறது. வேதம் யாவும் உமக்குத் தெரியுமா? மந்திரங்களின் விநியோகத்தை உபதேசிக்கும் வேத பாகங்களை சிறிதுமறியாத நீர் உமது புத்

திக்கித் தோன்றிய அர்த்தத்தைக்கொண்டு வேறொரு விதியைக் கற்பிக்கத் துணிகிறீர். எல்லா வேத பாகங்களையும் நன்ருய் நேரில் அறிந்த முன்னோர்களான ரிஷிகள் உபதேசித்த விதிகள் உமக்கு நம்புத்தக்கவைகள் அல்ல. ஒன்றையும் சரியாயறியாத இக்காலத்திலுள்ள உமது புத்தியில் சிறிது மந்திரத்தைப்பற்றிய தோற்றத்தால் கற்பிக்கப்பட்ட விதியை யாவரும் நம்பவேண்டும். அப்பா இது என்ன அகங்காரம்! எவ்வளவு துணிவு. நிச்சயமாய் இந்திர தேவதையைப்பற்றியதென்று தோன்றுகிற (निवेशनः संगमनो वसूनाम्) ஓர் மந்திரத்தை வேத வசனமே அக்கினி தேவதையில் உபயோகப்படுத்தவேண்டுமென்று உபதேசிக்கிறது. நமக்குத் தோன்றும் மந்திரார்த்தத்திற்கும் விநியோக விதிக்கும் இவ்வளவு வேற்றுமை ஏற்படுகிறது. விநியோக விதியான வேதபாகத்தை கனவிலும் காதிற் கேட்டறியாத நீர் மந்திரத்தைக் கொண்டுமட்டில் வேறு விதியை எவ்விதம் ஊகிக்கப்புறப்படுகிறீர்? உமது ஊகத்திற்கு எவ்வளவு சக்தியிருக்கக்கூடும்? உண்மையில் விவாஹத்திற்குரிய மந்திரங்கள் ருதுவாகாப் பெண்களிடமே பொருத்தமுள்ளவைகளல்லாமல் ருதுவானவளிடம் சிறிதும் பற்றுதலுள்ளவைகளல்ல என்று மனு உபதேசிக்கிருர்.

पाणिग्रहणिका मन्त्राः कन्यास्वेव प्रतिष्ठिताः ।
नाकन्यासु क्वचिन्नृणां लुप्तधर्मक्रिया हि ताः ॥

மனுவால் உபதேசிக்கப்பட்டது யாவும் வேதத்தில் சொல்லியதென்று மனு ஸ்மிருதியில் முதலிலேயே அறிவிக்கப்படுகிறது.

यः कश्चित्कस्यचिद्धर्मो मनुना परिकीर्तितः ।
स सर्वोऽभिहितो वेदे सर्वज्ञानमयो हि सः ॥

ஆகையால் வேறு விதியைக் கற்பிக்க நீர் ரிஷியல்ல.

யு.—இதெல்லாமிருக்கட்டும். வேதத்தில் எவ்விடத்திலாவது விவாஹத்திற்கு முன் ருதுவானவள் விருஷளி என்று சொல்லப்பட்டிருக்கிறதா?

ப.—ஸ்மிருதியை நம்பாதவன் வேதத்தைச் சொன்னாலும் விபரீத யுக்தி பேசலாம். நமக்குத் தெரிந்த வேதத்தைவிட ரிஷிகள் சொன்ன வேதார்த்தம் கொஞ்சம் கீழானதோ? இருக்கட்டும். யஜுர் வேதத்தில் ஓர் பாகமான இதிஹாஸத்தில் ஸ்பஷ்டமாய் இவ்விதம் சொல்லியிருக்கிறது—

पितृगृहे तु या कन्या रजः पश्यत्यसंस्कृता।
सा कन्या वृषली ज्ञेया तत्पतिर्वृषलीपतिः॥

அதை விசாரித்துப்பாரும். அதற்கென்ன சொல்லுவீர்?

யு.—சுருதி ஸ்மிருதிகளில் இவ்விதமிருந்தாலும் இக்காலத்தில் சிறிது ஆசாரங்கள் கெடவில்லையா? ஜாதகர்மம் முதலியவைகள் உபநயன காலத்தில் செய்யப்படுகிறதுகளே, அதுபோல் விவாஹத்தையும் ருதுவான பிறகு செய்துகொள்ளுகிறோமே.

ப.—சரி. வேதத்தில் வெகு நம்பிக்கையுள்ளவர்போல் பேசினீரே, அதுவும் போச்சா? நல்லது; சிறிது ஆசாரம் கெட்டிருப்பதைக்கொண்டு மற்றவைகளையும் தொலைத்துவிடவேணுமென்று சொல்லுகிறீரே. சிறிது பொருள் நஷ்டமாயிற்றென்று வீட்டிலுள்ள பணத்தை வீதியில் விட்டெறிவீரா? சில ஜனங்கள் மாண்டார்களென்று ஜீவிப்பவர்களையும் கொல்லவேணுமோ? இந்த யுக்திவாதத்தை மறக்காமல் உமது மக்களுக்கும் படிப்பித்துவையும். அறிவுள்ள

வர்களின் இலக்ஷணம் இதுவா? கெட்ட ஆசாரங்களையும் கூடியவரையில் திருத்தி நல்லவழிக்கு வர வேண்டியன்றோ பாடுபடவேண்டும். அதன்றி புதிதாயும் சில கேடுகளைச் செய்யத் துணிவது நலமாகுமோ? அன்றியும் சிலவிடங்களில் தகப்பன் பெயர் தெரியாத பிள்ளைகள் உண்டாகின்றன என்ற பிரஸித்தியைப்போல் ருதுமதி விவாஹத்தின் முயற்சி நம் தேசத்திற்கும் அவ்வித பிரஸித்தியை உண்டு பண்ணக் காரணமாகும். இதையே பாராசரரும் சொல்லுகிருர்—

कुमार्यश्च प्रसूयन्ते அதாவது கலியில் விவாஹமில்லாமலே பெண்கள் பிரஸவிப்பார்கள் என்று.

யு.—அப்படியாஞல் ருதுவாவதற்கு முந்தியே பிதா பெண்ணை தானம் செய்துவிடுகிருன். வரன் அப்பெண்ணைப் பெற்றுக்கொண்டு தன் வீட்டில் சில காலம் வைத்துக்கொண்டு ருதுவான பின் விவாஹத்தை செய்து கொள்ளுகிருன். அப்படிச் செய்துகொண்டால் இவ்வித தோஷங்களுக்கு இடமில்லையே.

ப—இதென்ன புதிதாயிருக்கிறது. தானமும் விவாஹமும் நீர் நினைக்கிறபடி வெவ்வேருன கர்மங்களல்ல. விவாஹத்தின் முக்கியமான ஐந்து அங்கங்களில் தானமென்பதும் ஓர் அங்கம். இதை மரீசி மகரிஷி சொல்லியிருக்கிருர்—

वाग्दानं च प्रदानं च वरणं पाणिपीडनम् ।
सप्तपादीति पञ्चाङ्गो विवाहः परिकीर्तितः ॥

வரப்பிரேஷணம் முதல் நான்காவது நாளில் செய்ய வேண்டிய கிரியை வரையிலுமுள்ள விவாஹ மந்திரங்களையும், அதுகளைப்பற்றி கிருஹ்ய ஸூத்திரங்

களில் உபதேசித்த விதிகளையும் பார்த்தால் இது மிக நன்றாய்த் தெரியும்.

யு.—இருக்கட்டும்; இந்த சாஸ்திரங்களெல்லாம் ருதுவான பின் செய்யும் விவாஹத்தில் பாபமுண்டு என்று தானே சொல்லுகிறது. புண்யம், பாபம், நரகம் என்ற விஷயம் வேறே. இவைகளில் நம்பிக்கையில்லாத ஓர் பிராமணன் ருதுவான ஓர் பெண்ணை விவாஹம் செய்து கொண்டானாகில் நீர் என்ன செய்வீர்?

ப.—அந்த விருஷலீ பதியுடன் வைதிகர்களான பிராமணர்கள் சேரமாட்டார்கள். சூத்திரையான அப்பெண் இந்த சாஸ்திரப்படி பாரியையுமல்ல. மனுஸ்மிருதி 3-வது அத்தியாயம் 14-வது சுலோகத்தைப் பார்க்கலாம்.

न ब्राह्मणक्षत्रिययोरापद्यपि हि तिष्ठतोः ।
कस्मिंश्चिदपि वृत्तान्ते शूद्रा भार्योपदिश्यते ॥

சூத்திரையான அவளிடம் உண்டாகும் ஸந்ததிகளுக்கு இந்த சாஸ்திரப்படி தாயபாகம் கிடையாதென்று 9-வது அத்தியாயம் 155-வது சுலோகத்தில் மனு உபதேசிக்கிறார்.

ब्राह्मणक्षत्रियविशां शूद्रापुत्रो न रिक्थभाक् ।

யு.—பெண்களின் விவாஹத்திற்கு மட்டில் வீணான இவ்வளவு நிபந்தனைகளை ஏற்படுத்தியிருப்பதினால்தான் பல துன்பங்கள் உண்டாகிறதுகள். முதலில் பிள்ளைகளும் அவர்களின் தாய் தந்தைகளும் பெண்காரர்களிடம் பணத்தை வாங்க நிர்பந்தம் செய்யத் தொடங்கி வரவர பெண்ணுள்ளவர்களுக்கு நேரிடும் சங்கடம் தாங்கக் கூடாத நிலையில் வந்து விட்டது.

(இன்னும் வரும்.)

பக்தி.

ஆகையினலே தேக பரிச்சிரமமும் பெரும் பொருட் சிலவுமில்லாத இந் நன்மார்க்க மொன்றனையே பின்பற்றியுய்யவேண்டுவ தவசியமாதலால் இதனைச் சிறிதெனதுள் ளக் கருத்திற்கெட்டியவாறும் சான்றோர் திருவுளக் கருத்திற்கிசைந்தவாறும் இவ ணெடுத்துக் கூறுவான் தொடங்குவோம். இதனிடை குற்றமே மெலிந்திடினும்,

வெண்பா.

காந்தவா யூசி கவரப்படுமுயற்கை
போந்ததியாம் பேசப் புகுந்தவிதம்—சாந்தார்
பொருப்பார் பிழைபொய்யா போதிலிருள் மக்கும்
பெருக்கும் பயிர்பருவம் பெற்று.

என்றுமுள்ள பெரியார் கூற்றைக் கடைபிடித்துக் கூறப்பு குந்தமையால் சான்றோர் குணத்தைச் சாலவுங் காட்டிக் குற்றங்களைந்து குணத்தினைக் கொள்ளுமாறு பத்திரிகா நேயர்களை மனப்பூர்வமான வணக்க வந்தனமுடன் வே ண்டுகிறோம்.

6. பக்தி भक्तिः । என்ற வடமொழி பதத்திற்கு:—

"எப்பொருள் வணங்கதற் பொருளிணங்கிடுமோ
அப்பொருள் வணக்கமே பத்தியெனப் பேரே."

என்றும் இதே பதத்திற்கு தென்மொழி வல்லுநர்கள் மிக அருமையாக,

"எப்பொருளைப்பற்றினால் இப்பிறவியறுபடுமோ
அப்பொருளைப்பற்றலே பத்தியெனப்பேராம்."

என்றும் பொருள் கூறுகின்றனர்.

மேற்கூறிய பக்தியென்பதெத்துணை வகைப்படுவது, அதன் சக்தி என்னை? எதற்குரியது? என்று சிறிதும் நமதுள்ளத்தில் தோன்றுவதில்லை. இதனைச் செவ்வனே நோக்கித் தெளிந்துகொள்வோமாயின், இம்மை, மறுமை, வீடென்னும், மும்மைப் பயனையுமளிப்பதற்கு, இப்பத்தியைத் தவிர, வேறொன்றும் வேண்டுவதில்லையாதலின்; இதனைச் சிறிதாராய்ச்சி செய்யப் புகுவாம்:—

7. பக்தியென்பது எத்துணை வகைப்படுவது?

பக்தியென்பது ஐந்து வகைப்படுவது. அதாவது, பீஜபக்தி, ஸூசிகாபக்தி, ஸாத்வீபக்தி, லதாபக்தி, தரங்கிணீபக்தி என ஐவகையாம்.

1. அவற்றுள் முதலாவது:—கர்ப்ப வாஸத்திலிருக்கு மூர்த்துவமுகச் சிசு, தனஞ்செயனென்ற வாயுவால், கீழ்முகமாக வரத்திருப்ப பூபதனமானவுடன் தன் தாயைத் தழுவுவதுபோலும், எறழுஞ்சி மரத்தின் விதையானது இரவில் கிழுதிர்ந்து, அருணோதயத்தில் மரத்தின் அடி சேர்தல் போலும் ஸம்ஸாரமாகிற இருளிற் சிக்குண்டுழலுமொரு மனிதன் மிகுந்த சிரம காலத்தில், இதனை வெறுத்து அந்தோ! வீணாயிடைவிடாதிவர்கட் குழைத்தோமே!! என்று புலம்பி சிறிது ஞானம் வந்தவுடன், நம்மைப் படைத்த கடவுளின்னருளினை நாமே பணியவேண்டுமென்றுண்டாகுந் தோற்றமே, பீஜபக்தி:—(இதனால், விதையை மனிதனுக்கும், இருளை அஞ்ஞானத்திற்கும், அருணோதயத்தை ஸ்வல்ப ஞானத்திற்கும், பொருத்தமாய் உதாஹரித்தார் என்க.)

2. மேற்கூறியவாறு அத்தகைய தோற்றம் உள்ளத்தில் தோன்றிடவும்—கர்ம வாஸனையால் பிறந்து பிறந்து பாபக்கடலில் மூழ்கிடவும் கரையேறவுரிய வழி காணாது

உயிர் துறக்கும் தருவாயில் கருணையங்கடலாகிய பகவான் காந்தக்கல் ஊசியைப்பற்றி யிழுப்பதுபோல் இவன் முன் தோணிபோல் தோன்றி-யிவனைக் கிரஹிப்பதே இரண்டாவதான ஸம்சிகாபக்தி.—

(இதனால் தானே பற்றிக்கொள்ளும் தன்மையுள்ள விதையைக்காட்டிப் பிறகு அடுத்த படியில் கிரஹிக்கும் சக்தியமைந்த காந்தத்தைக்காட்டியதால் இறைவன் திருவருள் பெறுதற்கு முன்னிலுமிப்பக்தி சிறந்ததெனச் சிறப்புரிமை கூறப்பெற்றது.)

3. "ஆமை கருப்போன்றும் ஆராய்ந்து பார்த்தும் உன்னை—
உமை கருப்போன்று—மொடுங்குவது
மெக்காலம்" என்றார் பத்ரகிரியார்.

மேற்கூறியவாறு பகவானிம்மனிதனைக் கைக்கொள்ளுமாறு சிறிது காலம் சிந்தித்திடவும் அதற்கடுத்த காலத்தில் அவனது மனம் வாஸநா பலத்தால் அக்கடவுளைத் தவிர வேறொருவரையும் சிந்தியாது; கற்பணிபூண்ட காதலி, தனது கணவன் பிரிந்த காலத்தில், எப்பொழுது மணவாளன் வருவாரோ என்று மிகவும் மனவருத்தங்கொண்டு அன்னவர் ஞாபகமாகவே யிருப்பதுபோலும், எனதருமைக் காதலியை விட்டிற்றனியேவிட்டு வந்தோமே! அவ்ளும் தனியாயிருப்பதற்குத் துணியாதவளே!! என் செய்கிறளோவென்று கன்றைப்பிரிந்த பசுவைப்போல் பிரிந்த காதலன் மனைவியை நினைப்பதுபோலவும் அண்டஜ வகுப்பிற் சேர்ந்ததாயும் நீர் வாழ்வதாயுமுள்ள கூர்மமானது—தான் முட்டையிடுங் காலம் தெரிந்து நீரில் முட்டையிட்டால் அழுகிவிடுமென்று பயந்து, தான் வசிக்கும் ஏரியின் வருங்காலிற் சென்று மணலைப் பறித்து முட்டையிட்டுப் பிறகு மணலை மூடிவிட்டு, அக்காலின்

முகவாயிலில் சென்று, மழைபெய்ய வுடனே குஞ்சுகள் தானே வருமென்றெண்ணி, மாரியினை யெதிர்பார்த்திருக்கத் தெய்வ வசமாய் வருண பகவானும் கருணை மாரி பொழிய வச்சமயம் பிரவாஹத்தின் வழியே முட்டையினின்று வெளிப்பட்ட குஞ்சுகள் ஏரியிற் சென்று காத்திருந்த தாயினைத் தழுவுவதுபோலும், தாய் குஞ்சினைத் தழுவுவதுபோலும், அப்பரம்பொருள் கிருபைக்குப் பாத்திரமாகும் தோற்றமே ஸாத்விபக்தி.

(இதனாலே தேசாந்தரத்திலிருக்கும் பொருளைக் கொள்ளுஞ் சக்தியற்ற காந்தக்கல்லைக் காட்டி, பிறகு எத்தேசம் சென்றாலும் எக்காலமாயினும் இடைவிடாப்பற்றுள்ள நாயக நாயகி பாவத்தைக் காட்டினமையால் முன்னிலுமிங்கு நன்கு பத்தியை விளக்கினார் என்க.)

4. வித்திலிருந்துண்டாகும் லதைகள், அவ்வினமாகிய விதையினின்று ஜநித்த பாதபங்களைத் தன்னினமெனச் சென்று தழுவ அவ்விருக்ஷங்களும் களித்து கிளையாகிற கரங்களாற் பற்றியெடுத்து, தன் தலையால் தாங்கி வளர்ப்பதுபோல், இறைவன் நம்மால் படைக்கப்பட்டவிவன் நம்மையே பற்றி நிற்கின்றானென்று அவனைப் பரிவோடு காத்துக் கைதூக்கி வருவதும் மேலான நிலைக்குக் கொண்டு வருவதும், இத்தகைத் தன்மைக்குரிய தோற்ற நிகழ்ச்சியே லதாபக்தி.

(சிலகாலம் சரீரப்பற்றுள்ள 'தாம்பத்யபாவத்தைக் காட்டி அடுத்து அனவரதமும் இடைவிடாப் பற்றுள்ளதாயும், காலக்கிரமத்தில் தானடைந்த தருவே தெரியாமல் தனைக் கவர்ந்துகொள்ளும் தன்மையுடையதாயுமுள்ள இவ்வுவமையால் எக்காரணம் பற்றியும் குறைவு பெறு பக்தி செய்யும் பக்தர்கட்குக் கடவுளீடுபட்டு தனது சிரமத்தைப் பாராது பக்தரக்ஷாபராயண ராகவே தனதடி

யவர்க்குதவுவரென்பது பற்றி முன்னிலுமிங்கு சீர்மை தெளியற்பாலது.) இதற்குத் தக்கதோர் சான்றாக அடுத்த பத்திரிகையிலிரண்டொரு வுபாக்யானங்களை வெளியிடுவாம்.

நதிநதங்களெல்லாம் தனது கணவனான ரத்நாகரத்தைத் தழுவுவதற்கு வெகு வேகத்தோடு சென்று கூடிய பின் தனதுருவம் தெரியாது கடலின் உவர் நீரோடு சேர்ந்து எப்படி பேதந்தெரியாது கலந்து விடுகின்றதோ அத்தன்மைபோல், கடவுளைப்பற்றிய ஆன்மஞானியுஞ் சார்ந்ததன்வண்ணமாய்ப், பிறப்பற்ற தன்மயமாய் விளங்கும் பேரொளிப்பரிணாமமே ஐந்தாவதான தரங்கிணீ பக்தி :—

(இதனால், உண்மையில் பற்றிலா பாதபங்களையும் லதைகளையுங்காட்டி எவ்வாற்றானும் பிரிக்கக்கூடாததான நதிகளின் ஸாகரஸங்கமத்தால் முன்னிலும் இங்கு மேலாந்தன்மை கூறப்பெற்றது.)

இதனையே பூர்வாசாரியாளாயும் பரமசிவனது திருவுருவாயும் ஷண்மதஸ்தாபகராயும் வேதமார்க்கப் பிரதிஷ்டாபகராயும் எவ்வுயிருமெளிதிலுய்யுமாறு பக்தியென்ற மார்க்கத்தைக் காட்டி பலவித நூல்களியற்றித் தானுமதன் வழியொழுகி அம்மார்க்கத்திற் பிறரையுங் கருணைகொண்டு நடத்தியவராயும் பரமாசாரியாளுமான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியாள் திருவாய்மலர்ந்தருளிய சிவாநந்தலகரியென்றுமோர் நற்பிரபந்தத்தில் முற்கூறிய ஐவகைப் பக்தியை எடுத்து விளக்கியிருக்கின்றனர்.

अङ्कोलं निजवीजसंततिरयस्कान्तोपलं सूचिका
साध्वी नैजविभुं लता क्षितिरुहं सिन्धुः सरिद्वल्लभम्।
प्राप्नोतीह यथा तथा पशुपतेः पादारविन्दद्वयं
चेतोवृत्तिरुपेत्य तिष्ठति सदा सा भक्तिरित्युच्यते॥

மேற்கூறியுள்ள பத்யத்தில் பக்தியென்ற ஒரு பொருளுக்குதாஹரணம் கூறப் புகுங்கால் முதலில் ஏறழுஞ்சிவிதையினைக்காட்டி அடுத்துச் சிலபொருள்களையுங் காண்பித்து விரித்திருப்பதின் பரமதாத்பர்யமாவது:—முதலாவதுதாஹரணம்முத லீற்றுதாஹரணம் வரையிலும் ஒன்றற்கொன்று அஸ்வாரஸ்யத்துடனும் மேம்பாடுடனும் கூறியிருத்தல் செவ்வனே தெற்றெனத் தெளிதல் காண்க:— பாதபத்து நீழல்விட்டு வெயிலில் விழுந்துருக்கும் விதைகள், தன்கருவிற் சேர்ந்துகொள்ளும் தன்மையற்றதாய் இருத்தலின், தார்ஷ்டாந்திகமான பக்தியென்றபொருளோ, அவ்வாறிலாது எவ்விடமிருந்தாலும் கவர்ந்திடும் தன்மையதாயிருத்தலின் அடுத்துக் காந்தக் கல்லை நிதர்சனமாக வரைந்தனர். இதனிலுமருகியே மேலிட்டது. இக்காந்தத்திற்குத் தேசாந்திரத்திலுள்ள ஊசியினையிழுப்பதற்குத் தகைமையாற்றலற்றதால் தேசாந்தரமாயினும், காலாந்தரமாயினும், தன்னைத் தவிர வேறு கதியில்லையென்று கணவனையே சிந்திப்பளென்று கருதியே கற்பணிபூண்ட மாதர்களைச் சான்றெனத் தேர்ந்தெடுத்தனர். இதனை விரிக்கப்புகின்

> அரும்பாலகா! பூமணஞ் சொற் பொருளாக முயிர்
> கரும்பாஞ்சுவை யெள்ளெண்ணையும் போலொத்த-
> காதலனை
> பெரும்பாலிலன்னங் கங்காஜலத்தைப்பிரிப்பதுபோல்
> சுரும்பாய்புலவாலை செக்கெமனெனத் தோன்றி
> னையே,

என்றவிப்பாலனைப் பழித்தல் என்ற துறையால் தனது நாயகன் காமிவிடாய்த் தீர்ப்பதற்குத் தக்கவிடையூறாய்த் தோன்றினையேயெனத் தனதுதாரத்திற் தோன்றிய மகவினையும் பழிப்பாளாயினவிப்பாசுரத்தினிடையே? பெறு

தற்கரிய தவங்களைச் செய்து எத்துணை நாட்களோவுன்னைச் சுமந்து யான் பெற்றெடுத்த பேற்றிற்கோ நீயிவ்விதமெனக்குதவினை? என்ற மிக்கக் கோபக் குறியோடு அரும் பாலகர்!! வென வழைத்து பூவினிடம் மணம் போலும், சொற்களிடம் பொருள்கள்போலும், சரீரத்திலுயிர் போலவும், கரும்பிடைச் சுவைபோலவும், எள்ளெண்ணை போலவும், பாலிலிட்ட நீர்போலவுமுள்ளவென தருமை மணாளனை வண்டுகள்போலும் புலவர்கள்போலும் இயமன்போலும் ஆலேபோலவும் செக்கெனவும் அன்னமெனவும் தோன்றி கணவனைப் பிரித்தல், உனக்குத தக்க முறையோ? என்றதினாலும்,

> यामि न यामीति धवे वदति पुरस्तात्क्षणेन तन्वङ्ग्याः ।
> गलिनानि पुरोवलयान्यपराणि तथैव दलितानि ॥

ஒரு நாயகன் தனது காதலியினிடம் தன்னைவிட்டுப்போகிறேன் போகவில்லை, யெனச் சொல்லும்பொழுது இதனைக் கேட்டவம்மங்கை தன் மணாளன் பிரிவாற்றாது மனக்கவலை கொண்டமையால் சரீரமிளைத்துக் கையிலணிந்த கடகம் சில நழுவிவிழவும் அக்கணமேபோகவில்லையெனுஞ் சீர்மையாந் தேமொழிகளைக்கேட்டு மனமகிழ்ச்சியெய்தினமையின்தேகமது பூரித்து மீதிய வளையற்றெறிக்கவும் பரமானந்தமடைந்தனள் என்றதினாலும், உலகமாதாவான ஜாநகி அசோகவனத்தில் வசிக்குஞ் சமயம் தனது அகத்துளப்பிற்றோன்றுமருமைக் காதலனுருவை நினைந்து அந்தோ! முன்னம் இருவரும் மிக்கக் குறைவு பெறுவகத்தன்பு பொருந்தியிணைபிரியாது வனம்புகும் சமயம் 'நீய் வருந்தலை நீங்குவன்யான்' என்று கூறியவெம்பிரானை நோக்கி, அவரது உரையினையே மறுமொழியாகச் செப்பி, (நீய் வருந்தலே என்பதற்கு நீர் வருமளவும் என்பது பொருள்.) அச் செல்வக்காதற் கண்ணனு

டன் வனம் புகுந்தும் சிறிதளவும் கவலையின்றி யான் வசித்துவரும் நாளில், எனது கொடிய வெஞ்சொற்களாலேயேயிவ்வாறு தீவினைகளையனுபவிக்கிறேன். எப்பொழுது இவ்விடம் எம்பிரான் வருவாரோ, யான் இவ்விடமிருப்பதாக யாராவது கூறத் தெரியவந்தால் . இவ்வுலகையே அரக்கரிலாது செய்வரே. இப்பாழுமரக்கன் வழியிலெதிர்த்த ஜடாயுவையும் குத்துயிராய்ச் செய்தானே, யானேயிவ்விலங்கையை யழிப்பேனே ஆயின் எனதாருயிர்க்காதலரின் பெருமை யென்னாகும், என்றிவ்விதம் பலவாறு பிதற்றி அங்கு காவற்றொழில் புரியுமரக்கிகளின் கடுஞ்சொற்களாலும், இராவணனது கொடியவுத்திரவினாலும் மிகவுமனநைந்தவளாயினி நாமுயிர்த்திருப்பதிற் பயனில்லையென்று நினைத்துயிர் துறக்கும் தருவாயில், அச்சிம்சுபா விருக்ஷத்தின் கிளையிற்பதிந்து மறைந்திருக்குமாஞ்சனேயர் இவைகளையெல்லாம் கேட்டு, இனி நாம் சும்மாயிருக்கலாகாதென்று கடிதினிஸ்ரீராமாமிருதத்தை யந்நங்கை காதிற் பொழிந்தார். அவ்வமயமிதனைக் காதாரப்பருகிய மைதிலியும் மனதைக் குளிர்வித்தவர் யாவரென நோக்குங்கால் கூறியதாவது:—

அரக்கனேயாக வேறோரமரனே யாகவன்றிக்
குரக்கினத் தலைவனே தானாகுக கொடுமையாக
விரக்கமேயாக வெங்கோனெம்பிரா னாமஞ்சொல்லி
யுருக்கினனுணர்வு தந்தானுயிரிது னுதவியுண்டோ !

வென்ற விப்பாசுரத்தானே யன்னவள் மனநிலைமை யெவ்வாறுளதென்று நோக்கத்தெரியாதார் சிலருமிலரே. ஆதலின் கற்பணிபூண்ட விம்மங்கைபோன்ற மங்கையரது திவ்விய சரித்திரங்களாலும் நாயகனை விட்டுப் பிரிய மனந்தளரா நிற்குமாதலினிதனை யுதாஹரணமாகக் கூறி யடுத்து "लता क्षितिरुहम्" என்று கூறினமையால் இங்கு

முன்போன்று கசடினைக் காண்டல் தகும்.

சில காலஞ் சரீரப்பற்றுள்ளதாயும் இச்சரீரமும் நிலையிலாதாகையாலும் எக்காலமும் பற்றுண்டிருப்பதற்குத் தகாதாதலின் பக்திக்கு அவ்வாறு கூறுவது போதாது. ஒருகாலு மிப்பற்றினைப் பிரிக்கத்தகாதது என்றெண்ணி மற்றொன்றுமிங்கு கூறுவாராயினர்.

கொடிகள் தாணிறந்தும் அம்மரங்களைவிட்டுப் பிரியாது, பல்காலும் தன்னுருவமும் அம்மரவுருவமு மிரண்டறவே கலந்ததாய் நிற்பதுபோன்றெனக் கூறிப் பிறகு மிதனினு முன்போலவே யருசியே நிகழ மேற் செல்வர், "ஸிந்⁴து⁴: ஸரித்³வல்லப⁴ம்" என்று.

எக்காலமும் இந்த லதாபாதபங்கள் பற்றுள்ளது போல் தோன்றினு முண்மையிற் பற்றிலாதாகையாலும் வனத்திடையிருப்பதால், உயிர்த்திருப்பினும், காட்டுத் தீயினின்றபாயமேற்படக் கூடுமாகையாலும், இதனை மறுத்துக் கடல் நீரோடு சேர்ந்து நீராகவே பரிணமிக்குந் தன்மையுள்ள நதி ஜலங்களை நிதர்சனமாய்க் காண்பித்து, பக்தியென்பது மனம் பரமன்பதஞ் சேர்ந்திடின், எவ்வாற்றானும், ஒருவராலும் பிரிக்கத்தகாததென வுரைத்தனரென்றும் பொருள்கொள்ளுதற்கிடமுள்ளது.

இனி யிப்பக்தியென்பது, எத்துணை வகையாவதென்பதற்குச் சான்றாக மற்றொருவாற்றானும் கூறுவாறுமுளர்.

(இன்னும் வரும்.)

T. N. இராமசந்திர சாஸ்திரி.

ஸ்மிருதிகள்.

வேதத்திற்கு விரோதம்போல் சிலவிடங்களில் தர்ம சாஸ்திர வாக்கியம் காணப்படின் அது நமக்குப் பிரமாணமாகாதென்று வேதத்தின் ஆதாரத்தை வைத்துக்கொண்டு தள்ளிவிடுகிறோம். இதனால் நமக்கு என்ன ஏற்பட்டதென்றால் வேதப்பிரமாணமே எங்கும் நிறைந்திருக்குமென்றும் அப்படியில்லாமலிருந்தால் பிரமாணமில்லையென்றும் அம்மகரிஷி எவ்வளவு மகிமை பெற்றவரானாலும் அவர் கவனிக்கத்தக்கவரல்லவென்று மேற்படவில்லையா? எவ்வளவு அவதாராம்சம் பெற்றவர்களாய் இருப்பினும் அவர்கள் வாக்கு நமக்குப் பிரமாணமில்லை. வேதப் பிரமாணத்தைச் சொன்னால்தான் ஒப்புக்கொள்வோம். பாருங்கள், நமது பரமாசாரியரவர்களும் சூத்திர பாஷ்யம் செய்ததிலும் ஏராளமான சுருதியையே பிரமாணமாகக் காட்டினார். ஆதல்பற்றியே அது போற்றப்படுகிறது. ஆகவே ஸ்மிருதிகள் பலவிருப்பினும் எல்லாம் ஒரே அர்த்தம் கொண்டவைதான். வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு காலத்திலும் இருந்துகொண்டு அவ்வத்தேயங்களுக்கும் ஜனங்களுக்கும் உபகாரமாக எழுதினார்களே தவிர கால மாறுதலில்லை. பாருங்கள் சமீபத்தில் நம் தேயத்தில் வைத்தியநாத தீக்ஷிதரென்பாரொருவர் ஓர் ஸ்மிருதியை எழுதினார். அது ஸ்மார்த்தர் யாவராலு மனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அவர் ஏதாவது தன் வார்த்தையைக் காண்பித்திருக்கிறாரா, சிலவிடங்களில் தீர்மானம் சொல்வதுகூட நியாயமில்லையென்று இதை தேசாசாரம்போலும் குலாசாரம்போலும் நடத்திக்கொள்ள வேண்டுமென்று வழுவழப்பாய் விட்டுவிடுகிறார். எங்

கேயாவது அவர் தீர்மானம் சொல்லியிருந்தாலும் அது பிரமாணத்திற்கு ஒத்ததாய் இல்லாவிடில் சங்கையின்றி தள்ளிவிடுவோம். வைத்தியநாத தீக்ஷிதர் அவர்கள் நமக்குச் செய்த உபகாரம் என்னவென்றால் பல ஸ்மிருதிகளில் இருக்கும் விஷயங்களையெல்லாம் ஒருங்கே திரட்டிக்கொடுத்த உபகாரம் ஒன்றைப் பெரிதாய்ப் பாவித்தே அதைக் கையாடுகிறோமே தவிர வேறல்ல. இன்னும் பாருங்கள், சமீபத்தில் மகான் கணபதி சாஸ்திரிகளவர்கள் விவாக விஷயத்தைப்பற்றி வயோ நிர்ணயம் என்னும் கிரந்தம் எழுதினார்கள். அதைப் பார்ப்போர் பரமானந்தமடைகின்றனர். அதன் காரணம் அவரது வாக்குக்காகவல்ல. மற்று ஆங்காங்கு சிதறிப் புதைந்துகிடந்த ஸ்மிருதி வாக்கியங்களையும் ஸந்தர்ப்பம் தெரியாமல் காதால் கேட்டிருந்த சுருதி வாக்கியங்களையும் திரட்டி வைக்க வேண்டிய விடங்களில் வைத்து நகாசு வேலை செய்தார்கள் என்ற பெருமையே அவர்களிடம் பெருகி நிற்கின்றது. இவ்விதமே இவர்கள் முதல் மகரிஷிகள் வரையிலும் அழகான விஷயங்களையும் சாசுவதமான சுருதி தாத்பரியத்தையும் வெளியிட்டார்களென்பதே அவர்களிடம் கௌரவத்திற்குக் காரணம். இதை நினைத்தே

धर्मशास्त्ररथारूढा वेदखड्गधरा द्विजाः ।
लीलार्थमपि यं ब्रूयुः स धर्मः परमो मतः ॥

தர்ம சாஸ்திரமென்னும் ரதத்திலேறிக்கொண்டு வேதமென்னும் கத்தியைக் கையிலேந்திய மகான்கள் விளையாட்டிற்காக ஏதேனுமொரு வார்த்தையைச் சொன்னாலும் அதுவும் பரம தர்மமாகவே இருக்குமென்கிறார். இதனாலும் அவர்களது வாக்கு வேத விரோதமாய் இராதென்றேற்பட்டது. இன்னும் எல்லா ஜாதிகளிலும் பிராமணன் விவாகம் செய்தான் என்கிறீர்கள். அந்த விவாகம் எப்படி

நடந்ததென்றும் அவர்கள் எல்லோரும் பத்னீ யெனப் பெயர்பெற்றார்களாவென்றும் அவர்களுக்கும் அவர்களிட முண்டான ஸந்ததிக்கும் தாய விபாகம் எப்படி ஏற்பட் டிருந்ததென்றும் விவரித்துச் சொல்ல இங்கு இடம் கொ டாதாயினும் சுருக்கிச் சொல்லின் கேவலம் காமமுள்ள சிலரை உத்தேசித்து அது ஏற்பட்டதென்றும் அதுவும் இக்காலத்திற்குத் தகுதியாய் ஆகாதென்றும் தள்ளினார்க ளென்போம். மற்று வியவகாரங்கள் மாற்றப்படவில் லையாவென்பீர்கள். அது காலவியல்புக்குத் தக்கவாறு மாறிடினும் எம்மட்டிற்குப் பரலோக ஸாதனத்திற்கு வி ரோதமேற்படாதோ அம்மட்டில் ஏற்றுக்கொள்வோம். அதனால் விசேஷமாய் நம் மதத்திற்கே கெடுதல் இல்லை.

ஆகவே, ஆரியர்களே! இதெல்லாம் நம் மதத்திற்கும் நம் முயர்குலத்திற்கும் அழகான கூற்றல்ல. நான் ஆரம் பத்திற் கூறியவாறு பிரபஞ்சம் இன்று உண்டானதல்ல நேற்று உண்டானதல்ல. அனாதியான இதன் கணக்கே நமக்கு வேண்டாம். வியவகார தசையிலுள்ள நமக்கு எல்லாம் எப்போதும் ஸ்திரமுள்ள பிரமாணம்தான். அதையே

देहात्मप्रत्ययो यद्वत्प्रमाणत्वेन कल्पितः ।
लौकिकं तद्वदेवेदं प्रमाणं त्वात्मनिश्चयात् ॥

தேகம் வேறு ஆத்மா வேறு என்று எப்படிப் பிரமாண மாய் நினைக்கிறோமோ அதுபோல் லௌகிகமான இந்தப் பிரபஞ்சமும் ஆன்ம ஞானம் வருமளவும் பிரமாணமுள் ளதுதானென்கிறார். அனாதி காலமாய் நாம் நித்யமான வேதத்தின்படியும் ஸ்மிருதியின்படியும் இதிகாஸ புரா ணங்களின்படியுமே நடக்கிறோம். நாம் பிரம்மாவின் அ ங்கங்களிலிருந்து வெவ்வேறாய் அனாதி கன்ம வாஸனைப் படி பிறக்கிறோமே தவிர, தவளை உத்பத்திபோல் பற்பல

ரூபத்தை அடைந்து மாறி மாறி ஜனிக்கவில்லை. ஆதியில் எல்லோரும் குரங்குகளாய்ப் பிறந்து மரத்திலேயே சஞ்சரித்துக்கொண்டிருந்து பூமியிலிறங்காமலே நாம் இருந்தோமாம். பிறகு உஷ்ணம் அதிகமாய் ஏற்படவே கீழே இறங்க ஆரம்பித்தோமாம். பிறகு இரண்டு காலால் நடப்பதே போதுமென்று நினைத்தோமாம். பிறகு வால் தேய்ந்து அறுந்துபோய்விட்டதாம். பிறகு மானம் தெரிந்து செடி கொடிகளை இடுப்பில் சுற்றிக்கொள்ள ஆரம்பித்தோமாம். பிறகு வரவர நாகரீகம் பெற்று இவ்விதமானோமாம். இப்படி ஒரு மகா புத்திமான் எழுதி வைத்ததையும் வாயாற் சொல்லும் காலமும் காதாற் கேட்கவும் ஐயோ பாபம் நான் இங்கு எழுதவும் காலம் நமக்கு நேர்ந்துவிட்டதே யென்பதைப்பற்றி யாரிடம் முறையிடுவேன்! இதை நாமும் நம்புவதென்றால் நம் வேதம் அவலமாய் ஆகாதோ. நமக்கு ஈசனுண்டு என்று ஏற்றுக்கொள்ள முடியுமோ. இன்னும் சில புத்திமான்கள் சொல்வதென்னவென்றால் மனிதனாய்ப் பிறந்த எல்லோரும் ஆதியில் மத்திய ஆசியாவில் சேர்ந்திருந்தோமாம். பிறகு அங்கு இருக்கமுடியாமல் பலர் வெளியேறி தெற்கே சிலரும் மேற்கே சிலரும் வடக்கே சிலரும் கிழக்கே சிலருமாகச் சென்றார்களாம். அதில் நாமெல்லோரும் சிந்து நதிக்கரையில் வந்து குடியேறினோமாம். அதனால் நமக்கு ஹிந்துவென்று பெயர் வந்ததாம். நாம் வரும்போது ரிக்வேதம் ஒன்றைமட்டிலும் கொண்டுவந்தோமாம்—என்று இன்னும் பலவாறு தேச சரித்திரமேற்பட்டு அது நமது பள்ளிப் பையன்களுக்குப் பாடமாய் வழங்கி வருகிறது. ஆரியர்களே இதை இப்போதைய எல்லோரும் உண்மை என்று நம்பியிருக்கிறார்கள். இத்தகையோர் ஆஸ்திகர்களாவார்களா? இவர்களுக்கு வேத

மென்பது கற்பிதமென்றாகாதா? மற்றும் இவர்களை ஒன்று கேட்கலாம். இவர்கள் மத்திய ஆசியாவில் இருந்த காலத்தில் ஏதாவது மதத்தைத் தழுவி இருந்தார்களா? மதம் உண்டென்றால் பிறகு வெவ்வேறு மதஸ்தர்களாய்ப் பிரிவானேன்? இல்லையென்றால் பிறகு எந்தக் காலத்தில் எங்கெங்கு எதனால் மதம் ஏற்பட்டது. நமக்கு ரிக் வேதம் மட்டிலும் கையிலேறியது எப்படி? அது மற்றவர்களுக்கேன் கிடைக்கவில்லை? இதைப்போல் இன்னும் பல சங்கைகள் நிகழலாம். அவைகளுக்குப் பதில் அதிற் கிடையாதோ? ஆகா இத்தகைய தேச சரித்திரத்தை யெல்லாம் வேதம்போல் நம்பி உறுப்போட்டுவிடுகிறார்கள்! பிறகு அந்தத் தாருவைப்போக்க நம்மால் மாளவில்லை. ஆகையால் இத்தகைய வீண் வாதங்களை யொழித்து அனாதி ஸித்தமான நம் மதக் கிரந்தங்களைப் பெரிதும் பாராட்டிப் போற்றினால் நாமும் நம் குலமும் நம் தேசமும் இம்மையில் சுகமடைவதன்றி மறுமையிலு மளவிலா வானந்தக்கடலில் மூழ்கி மெள்ளமெள்ளப் பிறகும் சம்சாரக்கடலில் இறங்காமல் நாம் கரையேறலாம். அப்போது ஈசன் நம்மை யாட்கொள்வார். இவ்விஷயத்தில் எவருக்கேனும் ஆசங்கை தோன்றிக் கேட்க விரும்புவார்களாயின் அவரது ஆசங்கையை இப்பத்திரிகையின் வாயிலாகவே தெரிவிக்கவேண்டுமென்றும் அதைப் பத்திராதிபர் பிரசுரிக்கவும் வேண்டுமெனவும் வேண்டுகிறேன்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

யோகாங்கங்களும் அவற்றின் கருத்தும்.

ஸம்ஸாரமாகிற பெருங்கடலில் மூழ்கி விஷய ஸுகத்தையே பெரிய புருஷார்த்தமாக நினைத்து அதை யடையவேண்டுமென்று பலவிடங்களில் பலாத்காரமாய்ச் செல்லும் சித்த விருத்தியை யடக்கித் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ள சக்தியில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு யோகாப்பியாஸம் அவசியம் வேண்டும். யோகாப்பியாஸம் செய்வதற்கு முக்கிய ஸாதனமான யோகத்தின் அங்கங்களையும் அவற்றின் கருத்தையும் நன்கறிந்துகொள்ள வேண்டியது முக்கியமாகையால் அவ்விஷயத்தைக் கொஞ்சம் விசாரிக்க முன்வருகிறோம்.

யோகத்திற்கு எட்டு அங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை யாவன:—யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என்பனவாம். இவற்றுள் யமம் என்பது அஹிம்ஸை, ஸத்தியம், அஸ்தேயம், (अस्तेयम्) பிரம்மசர்யம், அபரிக்கிரகம் என இவ்வைந்து உட்பிரிவுகளையுடையதாகும். எவ்விதக் காரணத்தாலும் எக்காலத்திலும் எந்தப் பிராணிகளுக்கும் ஹிம்ஸையை யுண்டாக்காமலிருப்பதே அஹிம்ஸை எனப்படும். இதைப்பற்றி ஆரியதர்மம் 1-வது புத்தகம் 8-வது ஸஞ்சிகையின் ஆரம்பத்தில் விரிவாய் எழுதப்பட்டிருப்பதால் இங்கு விஸ்தரிக்கவில்லை. 2-வது ஸத்தியம். ஒரு விஷயத்தைப்பற்றி பிரத்தியக்ஷம் முதலிய பிரமாணங்க

ளால் அறிந்தபடியே மனதிற்கும் வாக்குக்கும் வேற்றுமையிராதபடி வெளியிடுதலே ஸத்தியமாகும். இதைப்பற்றியும் ஆரியதர்மம் 1-வது புத்தகம் 5-வது ஸஞ்சிகையில் விரிவாய்க்காணலாம். 3-வது அஸ்தேயம். சாஸ்திரங்களிற் கூறிய வழியை மீறித் தன்னிஷ்டப்படி பிறர் பொருளைத் தாம் நேரிலாவது தம் மனிதரைக்கொண்டாவது அபஹரித்தல் ஸ்தேயமென்னப்படுகிறது; ஆனால் நேரில் அபஹரிப்பதற்கும் பிறர் மூலமாய் அபஹரிப்பதற்கும் தோஷத்தில் சொற்ப தாரதம்மியம் ஏற்படும். இவ்விதம எவ்வழி தொட்டும் அன்னியர் பொருளை அபஹரிக்காமலிருத்தலே அஸ்தேயம். 4-வது பிரம்மசர்யம். விஷய ஸுகத்தை அனுபவிக்க முயலும் இந்திரியங்களை மீறவொட்டாமல் அடக்கித் தம் வசமாக்கிக்கொள்ளுதலே பிரம்மசர்யமென்னப்படும். இதனால்—

स्मरणं कीर्तनं केलिः प्रेक्षणं गुह्यभाषणम् ।
संकल्पोऽध्यवसायश्च क्रियानिर्वृत्तिरेव च ॥

என்ற இவ்வாக்கியத்திற் கூறும் ஸ்மரணம் (நினைத்தல்) கீர்த்தனம் (புகழ்தல்) முதலிய விகாரங்களொன்றுமில்லாதிருக்கவேண்டுமென்று ஏற்படுகின்றது. 5-வது அபரிக்கிரகம். பாஹ்ய (வெளி) விஷயங்களை யடைவதிலும் அடைந்த பின் பாதுகாப்பதிலும் பிறகு அனுபவிக்குங் காலத்திலும் அவை நஷ்டமான பிறகும் ஏற்படும் கஷ்டங்களை நன்றாய் அறிந்து அவற்றில் விருப்பங்கொள்ளாதிருப்பதே அபரிக்கிரகமாகும். இவ்வைந்தும் "யமம்" என்னும் யோகாங்கத்தின் உட்பிரிவுகள். இவற்றுள் (ஜாதி, தேசம், காலம், ஸமயம் என்கிற இக்காரணங்களிலேதேனும் ஒன்றைக்கொண்டு) சிலவற்றை யனுஷ்டிப்பதும் சிலவற்றை விலக்குவதுமாயிராமல் எப்பொழுதும் சரியாய் அனுஷ்டிப்பதே மகா விரதமாகும்.

நியமம்.—சௌசம், ஸந்தோஷம், தபஸ், ஸ்வாத்தியாயம், ஈசுவரப் பிரணிதானம் இவ்வைந்து உட்பிரிவுள்ளது நியமம். 1. சௌசமென்பது பாஹ்யமென்றும் ஆந்தரமென்றும் இருவகைப்படும். மண் ஜலம் முதலியவற்றால் சரீரத்தை சுத்தப்படுத்திக்கொள்ளுதலும், சாஸ்திரத்தில் விலக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிற ஆகாரங்களை விலக்கி கிரகித்துக்கொள்ளும்படி சொல்லப்பட்டிருக்கிற ஆகாரங்களை அவ்வக்காலத்தில் கிரகித்துக்கொள்வதும் பாஹ்ய சௌசம். மைத்திரீ (நேசம்), கருணை முதலிய குணங்களால் சித்தத்திற்கேற்படும் சௌசம் ஆந்தர சௌசம். 2. ஸந்தோஷம். தன் சமீபத்தில் சுலபமாய்க் கிடைக்கும் ஸாதனங்களாலேயே திருப்தியடைந்து சரீரரக்ஷணம் செய்துகொண்டு இதரமான ஸாதனங்களை அபேக்ஷியாமலிருப்பதே ஸந்தோஷம். 3. தபஸ். பசி, தாகம், சீதம், உஷ்ணம், காற்று, மழை முதலியவற்றை ஸஹித்திருப்பது தபஸ் என்பது. 4. ஸ்வாத்தியாயம். மோக்ஷோபாயங்களை யறிவிக்கும் சாஸ்திரங்களைப் பயிலுதல், பிரணவ ஜபம் இவை ஸ்வாத்தியாயம். 5. ஈசுவரப் பிரணிதானம். "यज्जुहोषि यदश्नासि...तत्कुरुष्व मदर्पणम्" என்று ஸ்ரீபகவத்கீதையில் கூறியவாறு சாஸ்திர ஸம்மதமான எவ்விதக் கன்மங்களை நாம் செய்தாலும் அவற்றின் பயனை இச்சிக்காமல் ஈசுவரார்ப்பண புத்தியுடன் செய்வது ஈசுவரப் பிரணிதானமென்பதின் பொருள்.

ஆஸனம்.—(स्थिरसुखमासनम्) பத்மாஸனம், பத்ராஸனம், ஸ்வஸ்திகம், வீராஸனம் முதலியவற்றுள் எந்த ஆஸனத்துடனிருந்தால் சரீரத்திற்கு சிரமமில்லாமல் சலனமின்றி சுகமாயிருக்க முடியுமோ அதனைக் கைக்கொள்வது ஆஸனம்.

பிராணாயாமம்.—தனக்கு ஸௌகரியமான ஒரு ஆஸ

னத்தை நன்றாய் அப்பியாஸம் செய்துகொண்ட பிறகே பிராணாயாமத்தை அனுஷ்டிக்கவேண்டும். பிராணாயாமமென்றால் சுவாஸம், ப்ரசுவாஸம் இவற்றின் கமனத்தை (உட்புகுதல் வெளிவருதல்) நிறுத்துவதென்று பொருள். சுவாஸமென்றால் வெளியிலிருக்கும் காற்றை உள்ளுக்கு கிரகிப்பது. சரீரத்தினுள்ளிருந்து வெளிவரும் காற்றுக்கு நிசுவாஸமென்று பெயர்.

பிரத்தியாஹாரம்.—

स्वविषयासंप्रयोगे चित्तस्वरूपानुकार इव इन्द्रियाणां प्रत्याहारः ॥

அதாவது, சித்தமானது தனக்கு தோஷத்தை விளைவிக்கும் விஷயங்களினின்றும் விலகி நிற்கையில் இந்திரியங்களும் அவைகட்குரிய விஷயங்களில் பற்றுதலின்றி சித்தத்தின் நிலைமையை அநுஸரித்திருக்கும். சித்தமும், இந்திரியங்களும் சேர்ந்து இவ்விதமிருப்பதைத்தான் பிரத்தியாஹாரமென்னப்படுகிறது.

தாரணை.—देशबन्धश्चित्तस्य धारणा ॥ நாபிசக்கிரம் (தொப்பிள்), ஹிருதய புண்டரீகம் (மனநிலை), சிரஸ், நாஸிகாக்ரம் (மூக்கின் நுனி), முதலிய ஸ்தானங்களிலோ, ஈசுவரன், குரு முதலியவர்களின் மூர்த்தி (உருவம்) களிலோ சித்தத்திற்கேற்படும் ஸம்பந்தம் தாரணை.

தியானம்.—तत्र प्रत्ययैकतानता ध्यानम् ॥ மேற்குறித்த ஸ்தானங்களுள் ஏதேனுமொன்றில், சித்தத்தை ஸ்திரமாயிருக்கச்செய்து விரோதிகளான இதர விஷயப் பிரவாஹங்களால் பாதிக்கப்படாமல் சித்தமானது தனக்கிஷ்டமான வஸ்துஸ்வரூபத்திலேயே பற்றுதலடைந்திருப்பதைத்தான் தியானமென்னப்படும்.

ஸமாதி.—तदेवार्थमात्रनिर्भासं स्वरूपशून्यमिव समाधिः ॥ மேற்கண்ட தியானத்தினுடைய சிரகால அப்பியாஸத்தினால் த்யே

யவஸ்து (எந்த வஸ்து தியானம் செய்யப்படுகிறதோ அது தியேய வஸ்து) ரூபமாகி தன் ஸ்வரூபமற்றதுபோல் இருக்கும் அவஸ்தை (நிலைமை) க்கு ஸமாதி என்று பெயர்.

இவ்விதம் இங்கு கூறப்பெற்ற எட்டு அங்கங்களையும் நன்கறிந்துகொண்டு பிறகு யோகாப்பியாஸத்திற்கு ஆரம்பித்தால் சீக்கிரம் ஸித்திபெறலாமென்பது திண்ணம்.

இனி இந்த அங்கங்களின் ஸித்தி ஏற்பட்டிருக்கின்றதாவென்பதை யறிவதற்குள்ள அடையாளங்கள் யாவை? அவற்றின் பயன் யாது? என்னுமிவற்றைக் கொஞ்சம் விசாரிப்போம். 1. யமம். இதின் பிரிவுகளுள் முதலாவதான அஹிம்ஸையின் ஸித்தி ஏற்படுமாயின்—अहिंसाप्रतिष्ठायां तत्संनिधौ वैरत्यागः॥ என்னும் யோக ஸூத்திரத்தின் கருத்துக்கிணங்க அஹிம்ஸையின் ஸித்திபெற்றவர் வஸிக்குமிடத்துள்ள கீரி-பாம்பு, பசு-புலி, முதலிய பிராணிகள்கூட தங்களுள் ஸ்வபாவமாயுள்ள சத்ருத் தன்மையை விட்டு ஒன்றையொன்று நேசித்து ஸகோதரர் போன்று ஸந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருக்கும். இவ்வித ஸித்தி பெற்ற நம் பிராசீன மஹரிஷிகளுடைய ஆசிரமங்களை வர்ணிக்கப் புகுந்த சில கவிகள் ஆங்காங்கு ஆசிரமங்களிலிருக்கும் பிராணிகள் யாவும் விரோதத்தை விலக்கி ஸந்தோஷத்துடன் கூவிக் குலாவிக்கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருப்பதையும் பலர் அறிந்திருப்பார். இயற்கையில் குரூரமான பிராணிகள்கூட ஒருவரின் ஸன்னிதி மாத்திரத்தால் தன் துர்க்குணங்களை விட்டு சாந்த குணமுள்ளவைகளாகும் பக்ஷத்தில் அம்மகானின் சித்தமானது எவ்வளவு கருணை நிறைந்ததாயிருக்கவேண்டும்! இதனால் பிராணி ஹிம்ஸை என்னும் தோஷத்திற்கு ஒருபோதுமவர் பாத்திரராவதில்லை. இரண்டாவது ஸத்தியம். இதின் ஸித்தி ஏற்படுமாயின்—सत्यप्रतिष्ठायां क्रियाफलाश्रयत्वम्॥

என்றபடி யாகம் முதலிய அரும் புண்ணிய கன்மங்களை இயற்றி அடையக்கூடிய பெரும் பயன்களை அவ்விதக் கன்மங்களைச் செய்யாமலே ஒருவன் அடைய விரும்பினாலும் நீ அப்பயன்களை அடைவாய் என்று சொல்வதாலேயே அவன் தான் விரும்பிய பயன்களை அடையும்படி செய்துவிடலாம். முக்காலத்தில் விசுவாமித்திர மாமுனிவர் சூரிய வம்சத்தரசனாகிய திரிசங்கு என்பவனை நோக்கி நீ இம்மானிட சரீரத்துடன் ஸ்வர்க்கத்திற்குப் போகக்கடவாய் என்றுரைத்தவுடன் அவ்வரசன் அவ்வாறே ஸ்வர்க்கம் சென்றதும், அகத்திய மாமுனிவர் இந்திரப் பட்டம் பெற்ற நகுஷ சக்கிரவர்த்தியை நீ மலைப்பாம்பாகக் கடவாய் என்று சொன்னவுடன் அவ்வாறே அரசனும் மலைப்பாம்பாகிக் கீழே விழுந்ததும் அம்முனிவர்கள் ஸத்திய ஸித்தி பெற்றதனாலேயே என்றறிக. இவ்விதமே இன்னும் அநேகர் இவ்விதம் ஸத்தியஸித்தி பெற்றவராயிருந்தார்களென்றும் பல நூல்கள் கூறுகின்றன. இதனால் தங்களிஷ்டப்படி கார்யஸித்தியை யடையக்கூடிய வாக்வைபவம் இவர்கட்குண்டாகுமென்று தெரிகின்றது. மூன்றாவது அஸ்தேயம். अस्तेयप्रतिष्ठायां सर्वरत्नोपस्थानम् ॥ இதில் ஸித்தி பெற்றவர் தாம் விரும்பாவிட்டாலும் ஸகலமான ரத்தினங்களும் தாமாகவே அவரைநாடுகின்றன. நான்காவது—பிரம்மசரியம். இதனையொருவர் நன்றாய்ப் பாதுகாத்து ஸித்திபெறின் அவருக்கு விசேஷமான வீரிய லாபமும், ஞான வலிமையும் ஏற்படுகின்றது. இவ்விதமே—ब्रह्मचर्यप्रतिष्ठायां वीर्यलाभः ॥ என்ற யோக ஸூத்திரத்திலும் கூறியிருக்கின்றார். ஐந்தாவது அபரிக்கிரகம். விஷயங்களிலுள்ள குற்றங்களை யறிந்து அவற்றின்கண் இச்சைகொள்ளாமல் உறுதியுடன் இதனை யனுட்டிப்பவர் நாம் முன் ஜன்மத்தில் எப்படியிருந்தோம், இந்த ஜன்மம் எப்படி வந்தது, இனி வரும் ஜன்மம் யாது, இச்சரீரம் பூதங்களின்

(பிருதிவி, அப், தேஜஸ், வாயு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்கள்) சேர்க்கையாலமைகின்றதா, அல்லது பூதங்களின் சம்பந்த மாத்திரத்தால் ஏற்படுகின்றதா, இல்லாவிடில் வேறு ஸாதனங்களால் உண்டாகின்றதா என்னுமிவற்றை நன்குயறிந்துகொள்வார். இக்கருத்தையே अपरिग्रहस्थैर्ये जन्मकथंतासंबोधः என்னும் இச்சூக்திரத்தினல் பதஞ்சலி வெளியிட்டிருக்கின்றார்.

2-வது நியமம் இதின் உட்பிரிவுகளுக்குள் முதலாவது சௌசம். இதில் ஸித்தி ஏற்படுமாதல்—

स्थानाद्बीजादुपष्टम्भान्निःसन्दान्निधनादपि ।
कायमाधेयशौचत्वात्पण्डिता ह्यशुचिं विदुः ॥

என்ற பெரியோரின் கருத்தின்படி உற்பத்தி முதல் மரணம் வரையில் எச்சமயத்திலும் இச்சரீரம் அசுத்த பதார்த்தமேயின்றி ஒருபோதும் சுத்தமானதல்லவென்றறிந்து தன் சரீரத்தில் கூட ஜுகுப்ஸையை யடைவார். தன் சரீரமே அசுத்தமானதென்று அறுவறுப்படைந்தவர்க்கு பிறர் சரீரத்தோடு ஸம்பந்தப்படுவதில் விருப்பம் ஏற்படாதல்லவா? இதர சரீர ஸம்பந்தத்தை விலக்கவேண்டுமென்றே உறுதியான எண்ணமும் உண்டாய்விடும். இதையே—

शौचात्स्वाङ्गजुगुप्सा परैरसंसर्गः ॥

என்னும் ஸூத்திரத்தால் ஸ்ரீ வியாஸபகவான் வெளியிட்டிருக்கிறார். இவ்விதமேற்படும் ஜுகுப்ஸையின் பயன் யாதெனின்—

सत्त्वशुद्धिसौमनस्यैकाग्र्येन्द्रियजयात्मदर्शनयोग्यत्वानि च —पा. यो. सू.

என்றபடி ஸத்வகுணத்தை பிரகாசிக்கவொட்டாமல் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் ரஜஸ், தமஸ் என்னும் குணங்களின் சக்தி குன்றி ஸத்வ குணத்தின் பிரகாசம் வளரும். (இது "ஸத்வ சுத்தி" எனப்படும்.) துக்கம் அ

னுபவிக்கப்படாமையால் மனதிற்குப் பிரீதியுண்டாகும். (இது ஸௌமனஸ்யம்) இந்திரியங்கள் இஷ்டப்படி வெளிப் பொருள்களை நாடிச் செல்லாமல் கட்டுப்பட்டிருப்பதால் சித்தத்திற்கு ஸ்திரபாவம் (சஞ்சலமின்மை) ஏற்படும். (இது ஐகாக்கிரியம்.) விஷயங்களினின்றும் ஒழிவடைந்த இந்திரியங்கள் நமதிஷ்டப்படி ஆத்ம ஸ்வரூபத்தை அடைய விரும்பும். (இது இந்திரிய ஜயம்.) சித்தத்திற்கு ஆத்ம ஸ்வரூப தரிசனத்தில் யோக்கியதை ஏற்படுகின்றது. (இது ஆத்ம தர்சன யோக்யத்வம்.) இவ்விதம் ஸத்வசுத்தி முதலிய குணங்கள் சௌசாப்பியாஸம் செய்தவர்க்குண்டாகும். இரண்டாவது ஸந்தோஷம். ஸந்தோஷத்தினால் மிக உத்தமமான ஸுகம் உண்டாகின்றது. எவ்வளவு விபவமிருந்தாலும் மனிதர்க்கு மனத்திருப்தியில்லாவிடில் எப்போதும் துக்கமே. ஸந்தோஷமுடையவர் பொருளுள்ளோராயினும் அஃதில்லாதாராயினும் எப்போதும் ஸுகமாகத்தானிருப்பார். இச்சுகத்திற்கொப்பான சுகம் வேறொன்றுமில்லை. இக்கருத்தைத் தான்—

संतोषादनुत्तमः सुखलाभः ॥

என்கிற ஸூத்திரத்தாலும்;—

यच्च कामसुखं लोके यच्च दिव्यं महत्सुखम् ।
तृष्णाक्षयसुखस्यैते नार्हतः षोडशीं कलाम् ॥

என்ற இவ்வசனத்தினாலும் பெரியோர் வெளியிட்டிருக்கின்றனர். மூன்றாவது தபஸ். இதைக் குறைவின்றி அநுஷ்டிப்பதனால் சித்தத்திற்குக் கிலேசம் முதலியவற்றால் ஏற்படும் அசுத்தி நீக்கப்பட்டு சரீரத்திற்கும் இந்திரியங்களுக்கும் ஸித்தி ஏற்படுவதுடன் கால தேசங்களால் மறைந்திருக்கும் ஸூக்ஷ்ம வஸ்துக்களைக்கூட அறியும் சாமர்த்தியமும், அணிமாதி ஐசுவரியங்களின் ஸித்தியும்

உண்டாகும். நான்காவது ஸ்வாத்தியாயம். உத்தமமான மந்திரங்களை ஜபித்து ஸ்வாத்தியாயத்தில் ஸித்திபெற்றால் தேவர்கள் பிரத்தியக்ஷமாவதுடன் அவர்களின் ஸம்பந்தமும் உண்டாகும். இக்கருத்திற்கிணங்க—

स्वाध्यायादिष्टदेवतासंप्रयोगः ॥

என்று யோக சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஐந்தாவது ஈசுவரப் பிரணிதானம். ஈசுவரனிடத்திற் செய்யப்படும் பக்தியின் மிகுதியால் அவர் பிரஸன்னராயிருந்து ஸமாதிக்கு இடையூறை விளைவிக்கும் ஸகலக் கிலேசங்களையும் அகற்றி சித்த விருத்தியை ஸமாதிக்குத் தகுதியுள்ளதாய்ச் செய்கின்றார்.

3. ஆஸனம். ஆஸன ஜப (ஆஸனமென்னும் யோகாங்கத்தில் நன்றாய்த் தேர்ச்சியடைதல்) த்தால் சீதம், உஷ்ணம், பசி, தாகம் முதலியவற்றால் ஹிம்ஸை ஏற்படமாட்டாது. இதைப்பற்றி விஷ்ணு புராணத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

4. பிராணாயாமம். இதில் பயிற்சிபெற்றால் விவேக ஞான (பகுத்தறிவு) த்திற்கு ஆவரண (மறைவு) த்தையுண்டுபண்ணுகின்றவைகளும் அடிக்கடி ஸம்ஸார துக்கத்தைத் தரத்தக்கவைகளுமாயிருக்கின்ற அசுத்தமான கன்மங்கள் முறைமே ஒவ்வொரு க்ஷணத்திலும் குறைகின்றன. இதனால் சித்த மலங்கள் விலகி ஞானத்திற்கு வலிமை ஏற்படுகின்றது. இதனையே "प्राणायामैर्देहदोषान्" என்று மனுவும் கூறியிருக்கின்றார். மேலும் இதின் ஸித்தியால்தான் மனதிற்கு தாரணை என்னும் ஆறாவது யோகாங்கத்தை யனுஷ்டிக்க யோக்கியதை உண்டாகின்றது. இக்கருத்தை "धारणासु च योग्यता मनसः" என்று யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்.)

விளம்பரம்.

இப்பவும் 23-வது வருஷத்திய அத்வைத ஸபையின் வருஷாந்திர ஸமாஜத்தை 1917-௵ ஜூன்௴ 24-௳க்குச்சரியான பிங்கள௵ ஆனி௴ 11-௳ ஞாயிற்றுக்கிழமை முதல் **கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் மடத்தில்** வழக்கம்போல் ஒரு வாரம் நடத்தி அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு ஸமாப்தி செய்வதாக கமிட்டியில் தீர்மானித்திருக்கிறார்கள். பண்டிதர் முதலிய ஸபையின் அபிமானிகள் யாவரும் ஸபையின் ஆரம்பத்திலேயே அவச்யம் வந்து ஷை ஸபையை கௌரவப்படுத்தி, நன்றாக நடத்திக்கொடுத்து, ஸ்ரீ ஜகத்குரு அவர்களின் பூர்ணமான அனுக்ரகத்தையும் பெற்று க்ருதார்த்தர்களாக வேண்டுமென்றெதிர்பார்க்கிறோம். ஷை ஸபை ஷை ஞாயிற்றுக்கிழமை காலை சரியாக 5-நாழிகைக்கு ஸ்ரீ மடத்தில் ஆரம்பம் செய்யப்படும்.

நியமங்கள்:—பிராசீன பண்டிதர்கள் எல்லோருக்கும் **ஈசாதி × ஐதரேயாந்தம்** உபனிஷத் பாஷ்யத்தில் லேகன் பரீக்ஷை செய்யப்படும். நாளது ஸபையில் **கூடார்த்த தீபிகையுடன் கூடிய ஸ்ரீ பகவத்கீதா பாஷ்யத்தில்** லேகன பரீக்ஷையில், 8 கேள்விகள் கேட்கப்படும். அதில் 100-க்கு 60-க்கு மேற்பட்டு மார்க்கு வாங்குகிறவர்களில் முதலில் தேறிய இரண்டு பேர்களுக்கு, மதுரை பென்ஷன் தாசில்தார் மகா-ள-ள-ஸ்ரீ **பி. வெங்கடேச்வர அய்யர் அவர்கள்** வழக்கம்போல் தனியாய ௹ 15-ம், 10-ம் ஸம்மானம் அளிப்பார்கள். இவ்விதமே **நியாய ரக்ஷாமணியில்** லேகன பரீக்ஷையில், 8-கேள்விகளில் 100-க்கு 75-க்கு மேற்பட்டு மார்க்கு வாங்குகிறவர்களில் முதலில் தேறிய இரண்டு பேர்களுக்கு கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் மானேஜரும் ஹெட்மாஸ்டருமான மகா-ள-ள-**ஸ்ரீ ராவ்பகதூர் எஸ். அப்புசாஸ்திரியள் அவர்கள்** வழக்கம்போல் ௹ 15-ம், 10-ம் தனியாய் ஸம்மானம் அளிப்பார்கள். எல்லாப் பண்டிதர்களும் தங்கள் நாமதேயம், தகப்பனாரின் நாமதேயம், ஊர், இருப்பிடம் இவைகளையும், ஷை நோட்டீஸில் கண்ட கிளாஸுகளில் இன்ன கிளாஸில் பரீக்ஷைக்கு வருகிறோமென்பதைப்பற்றியும் ஷை ஸபா காரிதரிசி அவர்களுக்கு வருகிற வைகாசி௴ முதல் தேதிக்குள் விபரமாக எழுதித் தெரிவிக்க வேண்டும். தகுந்த முகாந்தரத்திற்காக முன்னாடி எழுத்து மூலமாக கமிட்டியின் அனுமதியைப் பெற்றுக்கொண்டாலொழிய எவ்வித காரணத்தினாலும் ஸபையின் ஆரம்ப தினத்திற்குப் பிறகு வருகிறவர்களைப் பரீக்ஷையில் சேர்க்கப்படமாட்டாது.

N. B.—ஸபைக்கு வருகிற பண்டிதர்கள் பரீக்ஷைகொடுக்கும் புஸ்தகங்களுடன் வரவேண்டும்.